# அவசரக்கூட்டம்

**பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் அவசரக்கூட்டம் 2021 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திரு.ஜெ.விநாயகம், பிஎஸ்சி., அவர்கள்**
**தனிஅலுவலர்/ ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 01

2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பல்லடம் நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 42225 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 48136 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 19.42 ச.கி.மீ கொண்டு 18 வார்டுகள் உள்ளடக்கியதாகும். இந்நகரில் 15804 குடியிருப்புகளும், 2933 வர்த்தக நிறுவனங்களும் உள்ளன, மேலும் நாள் ஒன்றுக்கு 11.00 மெட்ரிக் டன் அளவு திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அத்திடக்கழிவுகள் அறிவியல் முறையில் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்புமின்றி கையாளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பார்வை 1ல் கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை அமர்த்தி சுகாதாரப்பணிகளை மேற்கொள்ள வேண்டி வெளியிட்டுள்ள அளவுகோல்படி இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தேவைப்படும் பணியாளர்களின் விபரம் கீழ்கண்டவாறு :-

| வ.எண் | பணியின் விபரம் | அளவுகோல்கள்படி தேவைப்படும் பணியாளர்கள் | தற்போதுள்ள நிரந்தர பணியாளர்கள். | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | தூய்மை பணியாளர்கள் | 187 | 31 | 156 |
| 2 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 9 | 1 | 8 |
| 3 | ஓட்டுநர் | 12 | 2 | 10 |

மேற்கண்ட அளவுகோலின்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான 156 தூய்மை பணியாளர்கள், 8 மேற்பார்வையாளர்கள் மற்றும் 10 ஓட்டுநர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ள உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.1515/2021/எச்1)**

## பொருள் : 02

2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பல்லடம் நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 42225 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 55175 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 19.42 சதுர கி.மீ கொண்டு 18 வார்டுகள் உள்ளடக்கியதாகும். இந்நகரில் 15804 குடியிருப்புகளும், 2933 வர்த்தக நிறுவனங்களும் உள்ளன. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தற்சமயம் நகரின் அனைத்து வார்டுகளுக்கும் 3.90 MLD அளவுடைய குடிநீர் மற்றும் நகராட்சியின் நீராதாரம் மூலம் 0.80 MLD அளவுடைய குடிநீரும் 12 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நாள்: **02.10.2021**ன் படி வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை அமர்த்தி குடிநீர் விநியோகம் பணிகளை மேற்கொள்ள வேண்டி வெளியிட்டுள்ள அளவுகோல்படி இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தேவைப்படும் பணியாளர்களின் விபரம் கீழ்கண்டவாறு :-

| வ. எண் | பணியின் விபரம் | அளவுகோல்கள்படி தேவைப்படும் பணியாளர்கள் | தற்போதுள்ள நிரந்தர பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மேல்நிலைத் தொட்டிகள், தரைமட்டத் தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணியாளர்கள் | **16** | **0** | **16** |
| 2 | ஓட்டுநர் | **1** | **0** | **1** |
| 3 | துலக்குநர் | **1** | **0** | **1** |

மேற்கண்ட அளவுகோலின்படி குடிநீர் விநியோகப் பணிகளுக்கு தேவையான **16** பராமரிப்பு உதவியாளர்கள், **1** ஒட்டுநர் மற்றும் **1** துலக்குநர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**47.04** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1517/2021/இ1)**

**அலுவலக குறிப்பு**

**1.**மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 03</u>

பல்லடம் நகராட்சியில் வருவாய் நிதி **2021–2022**ன் கீழ் கீழ்க்காணும் பணிகளுக்கு **24.09.2021**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:01, மேற்கு கல்லம்பாளையம் வட்டமலைக் கவுண்டர் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 5.00 | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.10 % குறைவு |
| | | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.44 % அதிகம் |
| 2 | வார்டு எண்:02, சேடபாளையம் மயானம் பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து நகராட்சி பள்ளி வரை பகிர்மான | 1.50 | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.32 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | குழாய் அமைத்தல் | | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 4.80 % அதிகம் |
| 3 | வார்டு எண்:03, நாரணாபுரம் சூர்யா லே அவுட் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 0.50 | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.84 % குறைவு |
| | | | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 6.01 % அதிகம் |
| 4 | வார்டு எண்:06, பச்சாபாளையம் பொதுக் கழிப்பிடத்தில் பழுதடைந்துள்ள குழாய்கள், கதவு சரி செய்தல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் மற்றும் மந்திரி கவுண்டர் வீதியில் புதியதாக HDPE Tank விநியோகம் செய்தல் | 1.80 | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.15 % குறைவு |
| | | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 2.06 % அதிகம் |
| 5 | வார்டு எண்:06, பச்சாபாளையம் அரிசன காலனி, மந்திரி கவுண்டர் வீதி, குப்புசாமி நாயுடு வீதி, சுபகர்ண சாஸ்திரி சந்து ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள இரும்பு குழாய்களை மாற்றி அமைத்தல் | 4.50 | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.15 % குறைவு |
| | | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 2.37 % அதிகம் |
| 6 | வார்டு எண்:06, பச்சாபாளையம் மயானம் செல்லும் சாலை, மந்திரி கவுண்டர் வீதியில் உள்ள பழுதடைந்த வடிகால்ககளை மாற்றி அமைத்தல் | 5.00 | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 1.01 % அதிகம் |
| | | | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.21 % குறைவு |
| 7 | வார்டு எண் :06, பச்சாபாளையம் அரிசன காலனியில் உள்ள கழிவுநீர் தேக்க தொட்டி, மின்மோட்டர் அறை மற்றும் மழைநீர் வடிகால்களில் மராமரத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 0.50 | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 3.52 % அதிகம் |
| | | | திரு.C.சண்முகம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.32 % குறைவு |
| 8 | வார்டு எண்:07 சக்தி நகரில் ஏற்கனவே உள்ள திறந்தவெளி கிணற்றில் மின் மோட்டார் பொருத்துதல் மற்றும் | 4.70 | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.28 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிணற்றிலிருந்து ஒன்பதாம் பள்ளம் குட்டை வரை புதியதாக பிரதான குழாய் அமைத்தல் | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.46 % அதிகம் |
| 9 | வார்டு எண்:01 முதல் 09 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்தல் | 5.00 | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.36 % அதிகம் |
| | | | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.04 % குறைவு |
| 10 | வார்டு எண்:10 முதல் 18 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரி செய்தல் | 5.00 | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 1.38 % அதிகம் |
| | | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.04% குறைவு |

(ந.க.எண்: 1414/2021/இ1)

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 04</u>

பல்லடம் நகராட்சியில் வருவாய் நிதி 2021–2022ன் கீழ் கீழ்க்காணும் பணிகளுக்கு 29.09.2021ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்:06, பச்சாபாளையம் பட்டேல் வீதி முதல் கருப்பராயன் கோவில் வரை புதியதாக பகிர்மான குழாய்அமைத்தல் | 1.00 | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.49 % குறைவு |
| | | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 2.17 % அதிகம் |
| 2 | ஆண்டாள் நகர் நுண்ணுயிர் மையத்தில் உள்ள உரத் தொட்டியில் (Tub) இருந்து வெளியேறும் குழாய்களை சரி செய்தல், மின் விளக்குகள் அமைத்தல், உரத்தினை உலர்த்துவதற்கு கான்கிரீட் பிளாட்பாரம் அமைக்கவும் மற்றும் புதியதாக இரவு காவலர் அறை அமைக்கும் பணி | 4.70 | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.31 % குறைவு |
| | | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 2.45 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | பல்லடம் நகராட்சியில் உள்ள 12 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளில் பொருத்தப்பட்டுள்ள குளோரினேசன் இயந்திரத்திற்கு ஒரு ஆண்டிற்கு தேவைப்படும் திரவ குளோரின் (Sodium Hypo Chloride) சப்ளை செய்யும் பணி | 5.00 | ஸ்ரீ இராஜகணபதி இன்ஜினியரிங் வொர்க்ஸ், சென்னை | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.74 % குறைவு |
| | | | ஸ்ரீ சபரி இன்ஜினியரிங், சென்னை | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 2.94 % அதிகம் |
| 4 | பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான 8 பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் பணி மேற்கொள்ளுதல் | 4.90 | திரு.V.சுப்பிரமணியம், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 0.24 % குறைவு |
| | | | திரு. P.முருகன், ஒப்பந்ததாரர், பல்லடம் | ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விகிதத்தை விட 2.16 % அதிகம் |

(ந.க.எண்: 1415/2021/இ1)

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தனிஅலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

# சாதாரணக்கூட்டம்

**பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2021 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திரு.ஜெ.விநாயகம், பிஎஸ்சி., அவர்கள்**
**தனிஅலுவலர்/ ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 01

வார்டு எண் :18 மங்கலம் சாலை எஸ்.டி.எம். மில் பகுதியில் குடிநீர் அல்லாத பிற பயன்பாட்டிற்கான தண்ணீர் வசதி ஏற்படுத்தி தரக் கோரி உங்கள் தொகுதியில் முதலமைச்சர் மனு வரப்பெற்றது. மேற்கண்ட இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. குடிநீர் பணி என்பதை கருத்தில் கொண்டு சுமார் 120 மீட்டர் நீளத்திற்கு புதியதாக பிவிசி குழாய் பதிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.30,000/— தை 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களால் 30.06.2021 அன்று அனுமதி வழங்கப்பட்டது. எனவே மேற்கண்ட பணியினை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.30,000/— வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் : 884/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் : 2

பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் உரக்கிடங்கில் உள்ள அரவை இயந்திரம் (Shredding machine) பழுது அடைந்துள்ளதை சரி செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ.73,515/— தயார் செய்யப்பட்டுள்ளதை 'தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15'ன் கீழ் திருவாளர்கள்.லிங்கா அக்ரி டிரேடிங் அன்ட் மெசினரி பி லிமிட்டெட், திருப்பூர் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களால் 29.04.2021 அன்று முன்அனுமதி வழங்கப்பட்டது. எனவே மேற்கண்ட பணியினை திருவாளர்கள்.லிங்கா அக்ரி டிரேடிங் அன்ட் மெசினரி பி லிமிட்டெட், திருப்பூர் நிறுவனம் மூலம் பணி செய்து முடிக்கப்பட்டதற்கு ஆன செலவு தொகை ரூ.73,515/—வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண் : 968/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

பணியின் அவசர அவசியம் கருதி பணியினை செய்து முடித்ததற்கும், செலவு தொகை வழங்கியதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் : 03**

திரு.பி.முருகேசன், அரசு கூடுதல் வழக்கறிஞர், திருப்பூர் அவர்களின் கடிதம் நாள் **08.10.2021**ல் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், மாதப்பூர் கிராமம், க.ச.எண்.**872** மாதப்பூர் உரக்கிடங்கு தொடர்பான வழக்கு எண்.OS.No:234/2018 க்கு இந்நகராட்சி சார்பாக **11.03.2019, 13.03.2019, 25.03.2019, 26.03.2019, 27.03.2019, 29.03.2019, 02.04.2019, 12.04.2019, 03.06.2019, 04.07.2019, 20.09.2019, 12.11.2019, 20.12.2019, 11.02.2020, 14.04.2020, 04.07.2020, 28.02.2020, 24.02.2020, 04.01.2020, 12.03.2020, 14.04.2021, 23.04.2021, 09.07.2021** மற்றும் **06.08.2021** வரை **24** நாட்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்காடியதற்கான வழக்கு கட்டணம் தொகை ரூ.**45000/-** ஐ வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட வழக்கு கட்டணத்தொகை ரூ. **45000/-** ஐ திரு.பி.முருகேசன், அரசு கூடுதல் வழக்கறிஞர், திருப்பூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.
**(ந.க.எண் 856/2014/எச்1)**

**<u>பொருள் : 04</u>**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் எண் : TN 39 AH 3166 க்கான ஆயில் சர்வீஸ், வீல்கள் சர்வீஸ், ரேடிட்டர் ஓஸ் மாற்றுதல், கியர் பாக்ஸ் சரிசெய்தல், சைலன்சர் கிளாம்பு மாற்றுதல், ஹாரன் சுவிட்ச் மாற்றுதல், டிங்கரிங் மாற்றும் பேச் ஒர்க், சீட் கவர் மாற்றுதல் மற்றும் கிளச் செக்கப் செய்தல் ஆகிய பழுதுகளை சரிசெய்வதற்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.ஜெயன் ஆட்டோ ஒர்க்ஸ், பனப்பாளையம், அலங்கார் தியேட்டர் எதிரில், பல்லடம் **641 664.** | **2,24,280** |
| 2 | திருவாளர்கள்.குமார் டிங்கரிங் பாடி அன்ட் பெயிண்டிங் ஒர்க்ஸ், **23/29**, ஆண்டாளம்மாள் லே அவுட், வரதராஜபுரம் மேடு, உப்பிலிபாளையம், கோயம்புத்தூர். | **2,18,980** |
| 3 | திருவாளர்கள்.ஏபிடி இன்டஸ்ட்ரீஸ், **9/16**, பொள்ளாச்சி மெயின் ரோடு, பல்லடம் **641 664.** | **1,65,256** |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். ஏபிடி இன்டஸ்ட்ரீஸ், பல்லடம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்காகும் செலவின தொகையை வழங்கவும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். ஏபிடி இன்டஸ்ட்ரீஸ், பல்லடம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான செலவினத்தொகையை வழங்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் : 05</u>**

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் எண் : TN 42 F 1968 க்கு **2021 – 2022**ம் ஆண்டிற்கான தகுதி சான்று பெற ஏதுவாக ஆயில் சர்வீஸ், வீல் சர்வீஸ், ஆயில் லீக் மற்றும் ஏர் லீக் சரி செய்தல்,ரேடியேட்டர் செக்கப், சாவி சுவிட்ச் மாற்றுதல், கியார் ராடு புஷ் செக்கப்,, ஸ்பிரிங்கட் செக்கப், கிலோ மீட்டர் பழுது சரி செய்தல், **8.25-16** டயர் இரண்டு மாற்றுதல், எப்.சி. பணிகள் மற்றும் சிறு சிறு பழுதுகள் சரி செய்தல்,

பெயிண்டிங் , ஸ்டிக்கர், லைட் செக்கப் செய்தல் ஆகிய பழுதுகளை சரிசெய்வதற்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | லில்லி டிங்கரிங் அன்ட் பெயிண்டிங் ஆட்டோ மொபைல்ஸ், திருச்சி மெயின் ரோடு, பல்லடம். | 197600 |
| 2 | திரவியம் டிங்கர் அன்ட் பெயிண்டிங் பாடி பிட்டர் ஒர்க்ஸ், 3/560, திருச்சி மெயின் ரோடு, மாதப்பூர் , பல்லடம். | 192800 |
| 3 | டிவிஎஸ் அய்யங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிட், 3/542, பனப்பாளையம், சமத்துவபுரம்,பல்லடம். | 123172 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள். டிவிஎஸ் அய்யங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிட்,பல்லடம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்காகும் செலவின தொகையை வழுங்கவும் மற்றும் பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள். டிவிஎஸ் அய்யங்கார் அன்ட் சன்ஸ் பிரைவேட் லிட்,பல்லடம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான செலவினத்தொகையை வழங்கவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

## பொருள் : 06

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 18 வரை உள்ள சாலைகளில் பெயர் பலகைகள் ஆய்வு செய்யப்பட்டதில், பல்லடம் நகராட்சி சாலைகளிலுள்ள பெயர் பலகையில் Reflective Sticker இல்லாத நிலையில் உள்ளதால், சாலைகளின் பெயர்களை அறிய பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் மிகவும் சிரமமான நிலை உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள பெயர் பலகைகளில் Reflective Sticker அமைக்கும் பணிக்கு ரூ.0.70 இலட்சத்திற்கு (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும்,மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 07

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொதுப் பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, வசூல் மையம், சுகாதார பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் உள்ள கணினி இயந்திரங்கள் 24 எண்ணிக்கையும், 9 எண்ணிக்கை பிரிண்டர்கள் உள்ளது. கணினியில் பதிவேற்றும் பணிகள் நடைபெறும் போது மின்சாரம் தடைபெறும் நேரங்களில் அலுவலக பணிகள் பாதிக்கப்படுகிறது. நகராட்சி அலுவலகத்தில் உள்ள UPS பேட்டரி அதனுடைய செயல் இழந்துவிட்டதால் மின்சாரம்

தடைபெறும் போது கணினிகள் இயக்க முடியவில்லை. எனவே அலுவலக பணிகள் தடையின்றி நடைபெற புதியதாக UPS பேட்டரிகள் வாங்கவேண்டியுள்ளது.

எனவே நகராட்சி அலுவலகத்தில் உள்ள பழைய 12 எண்ணிக்கை (BUY BACK) பேட்டரியை எடுத்துக்கொண்டு புதிதாக 7 எண்ணிக்கை பேட்டரி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.0.65 இலட்சத்திற்கு உரிய நிர்வாக அனுமதியும், பணியை பொதுநிதியின் கீழ் மேற்கெள்ள மன்றப் பொருள் தயார் செய்யலாம். (ந.க.எண் : /2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 08

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுப்பணி துறைக்கு சொந்தமான நீர்நிலை மேம்பாட்டு பணிகளை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் – 2021–2022 ன் கீழ் மேற்கொள்ள ரூ.524.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கொசவம்பாளையம் குட்டை சர்வே எண்:347/2A நீர்நிலை மேம்பாடு செய்தல் | 74.00 |
| 2 | வடுகபாளையம் குட்டை சர்வே எண்:239/1A நீர்நிலை மேம்பாடு செய்தல் | 450.00 |
| | **மொத்தம்** | **524.00** |

எனவே, பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுப்பணி துறைக்கு சொந்தமான நீர்நிலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்காக ரூ.524.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெரும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பி மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்: 1563/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காண் பணிக்குத் தேவைப்படும் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 09

வடகிழக்கு பருவமழை துவங்க உள்ளதை முன்னிட்டு அனைத்து துறை அரசு கட்டிடங்கள் மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்லடம் நகராட்சிக்குட்ட பாரதிபுரம் மற்றும் மேற்கு பல்லடம் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாத நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட இரண்டு அங்கன்வாடி மையங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்த ரூ.0.30 இலட்சத்திற்கு

(ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்: /2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 10

பல்லடம் நகராட்சியில் தீனதயாள்அந்தியேதயா யோஜனா தேதிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (Day-NULM) 2020–2021 திட்டத்தின் கீழ் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு உள்நோயாளிகளுடன் வரும் உதவியாளர்களுக்கு தங்குமிடம் (Secial shelter) கட்டும் பணிக்கு ஏதுவாக மண்ணின் தன்மை பற்றி அறிய மண்பரிசோதனை செய்து பணி மேற்கொள்ள வேண்டி இருப்பதால், அரசு மருத்துவமனை வளாகத்தில் கட்டிடம் கட்டும் இடத்தில் இரண்டு இடங்களில் மண் பரிசோதனை செய்ய வேண்டியுள்ளது. மேற்காணும் பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசரம் அவசியம் கருதி இப்பணியிணை மேற்கொண்டமைக்கு பட்டியல் தொகை ரு.57820/–னை முதல்வர், கோவை தொழில் நுட்ப கல்லூரி (CIT) அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1702/2016/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 11

பல்லடம் நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகள் இயற்கை இடர்பாடுகள், குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்வதால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கவும் சாலையின் அகலம் 4 மீட்டருக்கு குறைவாக இருந்தால் சிமென்ட் சாலை அல்லது பேவர்பிளாக் சாலையாகவும். 4 மீட்டருக்கு மேல் இருந்தால் தார்சாலை ஆகவும் மேலும் நகராட்சி வரைபடத்தில் சாலையின் பெயர், சாலையின் அகலம் 0 முதல் 3 மீட்டர் வரை சந்து ஆகவும், 3 மீட்டர் முதல் 4 வரை உள்ள சாலை வீதியாகவும், 4 மீட்டருக்கு மேல் உள்ள சாலைகள் ரோடு ஆகவும் ஏற்கனவே உள்ள சாலைகளை Lane, Street, Road என வகைப்பாடு செய்து சாலையின் எண்ணிக்கை, நீளம், அகலம், மழைநீர் வடிகாலின் நீளம் சிறுபாலங்கள் போன்று இனங்கள் வாரியான சாலைகளின் அனைத்து விபரங்களையும் தனிதனியாக வகைப்பாடு செய்யப்பட்ட விபரங்களை நகராட்சியின் வரைபடத்தில் பொருத்தி Road Ledger தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட வரைபடங்களை இனவாரியாக தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் சமர்பிப்பதற்கு கலந்தாலோசகர் (Consultant) அவர்களை நியமனம் செய்து தான் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதால் ரூ.0.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பிடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 12

பல்லடம் நகராட்சி பகுதியில் உள்ள நகராட்சி மின் இனைப்புகளை ஆய்வுசெய்யப்பட்டதில் மின் இனைப்பு பெட்டிகள் பழுதடைந்தும், மீட்டர் போர்டு, Wire மற்றும் Fuse unit பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும் மருதாஞ்செட்டி தோட்டம், சேடபாளையம் ரோடு, பகவதி அம்மன் நகர், கணபதி நகர், சிவசக்தி நகர், அரிசன காலனி, தெற்குபாளையம், அரிசன காலனி, நாரனாபுரம் போஸ்ட் ஆபிஸ் அருகில், அரசங்காடு, கரையாம்புதூர், சக்தி சகர், பழனி கவுண்டர் வீதி, பொத்தாம்பாளையம் ரோடு, முஸ்லீம் மயானம், சரஸ்வதி நகர், பஜனை கோவில் வீதி, கதர் கடை அருகில், மேற்கு பல்லடம் அரிஜன காலனி, கெசவம்பாளையம் ரோடு மாரியம்மன் கோவில் அருகில், கெசவம்பாளையம் ரோடு, சின்னையா கார்டன்,கே.வி.கே நகர், மாருதி நகர், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில், சைசிங் முன்புறம், செட்டிபாளையம் ரோடு சர்ச் முன்பு, அண்ணா நகர் பள்ளி கூடம் அருகில், காந்தி நகர், அம்மாபளையம் ரோடு ஆகிய 30 இடங்களில் மின் இனைப்பு பெட்டிகள் பழுதடைந்துள்ளது. இயற்கை இடர்பாடுகளை தவிர்க்கவும் மின்சாரம் சம்மந்தப்பட்ட பணி என்பதால் மேற்கண்ட பணியை செய்ய வேண்டியுள்ளது.

எனவே பழுதடைந்த மின் இனைப்பு பெட்டிகள் சரி செய்ய ரூ.1.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 13

பல்லடம் நகராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் (JJM) திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கும் பொருட்டு நகராட்சிப்பகுதிகளில் உள்ள பிரதான குழாய்கள், பகிர்மான குழாய்கள், மேல்நிலைத் நீர்தேக்கத் தொட்டிகள், பொது குழாய்கள், ஆழ்துளை கிணறுகள், திறந்தவெளி கிணறுகள் மற்றும் வீட்டு குடிநீர் இணைப்புகள் (Test) போன்றவைகளை கணக்கீடு செய்து வரைபடம் (Map) மூலம் தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் சமர்பிக்கப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட வரைபடங்களை இனவாரியாக தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்தில் சமர்பிப்பதற்கு கலந்தாலோசகர் (Consultant) அவர்களை நியமனம் செய்து தான் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதால் ரூ.0.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பிடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண் : /2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 14

பல்லடம் நகராட்சி பகுதிகளில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நேரடி ஆய்வு மேற்கொண்ட போது அண்ணாநகர் தொடக்கப்பள்ளியில் பழுதடைந்த (RCC Sheet) மேற்கூறையினை GI Sheet களால் ஆன மேற்கூறையாக மாற்றவும், கழிப்பிடம், சமையலறையில் பராமரிப்பு பணிகள் செய்யுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் நகராட்சிக்கு சொந்தமான அண்ணாநகர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் மேற்கூரை GI Sheet அமைக்கவும், சமையலறை மற்றும் கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் சரி செய்யவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.80 இலட்சம் ஆகும். மேற்காணும் பணிக்கு உரிய நிர்வாக அனுமதியும், தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதியும் கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 15

பல்லடம் நகராட்சி பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கொரோனோ (covid 19) தடுப்பு விழிப்புணர்வு செய்யவும், சமூக இடைவெளி கடைபிடிக்காதவர்களை எச்சரிக்கை செய்யவும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் வாகனத்தில் வண்டி எண். TN 42 P4444 (Bollero Jeep) வாகனத்தில் (Ampilifier) ஒலிபெருக்கி, மைக் வைக்க வேண்டியுள்ளது.

மேலும் நகராட்சி வாகனம் (Bollero Jeep)யில் ஒலிபெருக்கி, மைக் அமைக்கவும் ஆகும் உத்தேச செலவு ரூ.8500 (எட்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) இப்பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதியும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணியை மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 16

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 08 பனப்பாளையம் சேரன் நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் போது நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் வீட்டு குடிநீர் இணைப்பில் தண்ணீர் குறைவாக வருவது தெரிய வருகிறது. மேற்கண்ட பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட குழாய் என்பதாலும், குழாய் பழுதடைந்து அமர்ந்த

நிலையில் உள்ளது. எனவே குடிநீர் பகிர்மான குழாய் மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. மேலும் குடிநீர் பணி என்பதால் பொது மக்கள் நலன் கருதி புதிதாக சேரன் நகர் பகுதியில் பகிர்மான குழாயை புதியதாக மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.75 இலட்சம் இலட்சத்திற்கு (ரூபாய் எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கும் மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் : /2021/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 17</u>

தந்தை பெரியார் அவர்களின் 143–ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு பல்லடம் நகராட்சியின் வளர்ச்சி திட்டப்பணிகளின் விவரத்தினை விடுதலை நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரம் கட்டணம் தொகை ரூ.6000/–வழங்க ''விடுதலை நாளிதழில் சென்னை'' அவர்களிடமிருந்து 27.09.2021 அன்று பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.6,000/–ஐ ''விடுதலை நாளிதழில் சென்னை''அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:279/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 18</u>

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்;297/செமதொஅ/ நாள்.05.08.2021 யின் படி பல்லடம் நகராட்சியின் வளர்ச்சி பணிகளை திருப்பூர் மாலை மலர் பதிப்பில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தமிழகத்தின் தொழில்வளம் மற்றும் தமிழக அரசின் 100 நாள் சாதனைகள் பற்றிய அரிய, பல்லடம் நகராட்சியின் வளர்ச்சி திட்டப்பணிகளின் விவரத்தினை மாலை மலர் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரம் கட்டணம் தொகை ரூ.9,975/–வழங்க ''மாலை மலர் நாளிதழில் திருப்பூர்'' அவர்களிடமிருந்து 27.08.2021 அன்று பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.9,975/–ஐ ''மாலை மலர் நாளிதழில் திருப்பூர்''அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:279/2020/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## பொருள் : 19

பார்வை 1.மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அவர்களின் உத்திரவு நாள்.01.02.2019

2.இரண்டாவது கூடுதல் மாட்டநீதிபதி திருப்பூர்அவர்களின் கடிதம் நாள்.12.04.2019

3.அரசு வழக்கறிஞர் திருப்பூர் அவர்களின் கடிதம் நாள்.01.10.2021

பல்லடம் நகராட்சியில் SBM-SWM-2019-2020 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் மாதப்பூர் கிராம சர்வே எண்.872 ல் உள்ள உரக்கிடங்கில் வள மீட்பு மையம் (RRC) கட்டுதல் பணி மேற்கொள்ள 07.01.2020 ஆம் நாளன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிமேற்கொண்டதை தொடந்து, திருப்பூர் இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் உத்திரவு நாள்.12.04.2019ன் படி மேற்படி மாதப்பூர் இடத்தின் திறந்தவெளியில் நிரந்தர கட்டிடங்கள் கட்டவும் வேறு கட்டுமான பணிகள் எதுவும் மேற்கொள்ள கூடாது எனவும் இடைக்கால தடைஉத்திரவு (STATUSCO) வழங்கியுள்ளது.மேலும் அரசு வழக்கறிஞர், திருப்பூர் அவர்களின் சட்ட கருத்துருவில் மாதப்பூர் நிலத்தில் புதிய கட்டுமான பணிகள் மேற்கொள்ள மாண்பமை திருப்பூர் இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின் உத்திரவின்படி இடைக்கால தடை உத்திரவு வழங்கப்பட்டுள்ளதால் தற்சமயம் மாதப்பூர் நிலத்தின் திறந்த வெளியில் புதிய கட்டுமான பணிகள் மேற்கொள்ள இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, மேற்கண்ட பணியானது SBM-SWM-2019-2020 ஆம் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட திட்டப்பணி என்பதாலும், திடக்கழிவு மேலாண்மை பணி என்பதாலும் குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்கப்பட்டு பணி முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், வள மீட்பு மையம் இல்லாத காரணத்தால் நாள் தோறும் சேகரமாகும் மறுசுழற்சி செய்யக் கூடிய திடக்கழிவுகளை கையாள்வதில் இந்நகாட்சி நாள் தோறும் நடைமுறை சிக்கல்களை எதிர்கொண்டு வருவதாலும், மேற்கண்ட வள மீட்பு மையம் கட்டுதல் பணியை மாதப்பூர் உரக்கிடங்கிற்குப் பதிலாக பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டாள் நகர் (MCC) மையத்தில் உள்ள இடத்தில் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் :1031/2019/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதியும், நகரில் தற்சமயம் வேறு எங்கும் வளமீட்பு மையம் இல்லை என்பதாலும், ஆண்டாள் நகரில் உள்ள MCC மையத்திலேயே வளமீட்பு மையம் கட்டுவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 20

பல்லடம் நகராட்சிக்கு 15 வது மத்திய நிதிக்குழு திட்டம் 2020 – 2021ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடித ந.க.எண்.20452/2020/LA3, நாள்.10.11.2020ம் தேதிய முதல் தவணையாக ரூ.67,63,831/ - நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண்.20452/2020/LA3, நாள்.17.11.2020 தேதியில் குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதன் அடிப்படையில் குடிநீர் பணிகள் 4 எண்ணிக்கையும் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் 5 எண்ணிக்கையும், மொத்தம் 9 பணிகளுக்கு மதிப்பீடு ரூ.69.35 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு

நகர்மன்றத் தீர்மான எண்.188/2020, நாள்.31.12.2020ம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 24.02.2021ம் நாளன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திடக்கழிவு மேலாண்மை 5 எண்ணிக்கை பணிகளுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள குடிநீர் பணிகள் 4 எண்ணிக்கை பணிகளுக்கு 25.05.2021, 04.08.2021 மற்றும் 28.09.2021 ஆகிய நாட்களில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் நான்கு முறையும் ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. அதன் விபரம் பின்வருமாறு,

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்:15 அண்ணாநகர் மேல்நிலைத் தொட்டி முதல் அரசு மருத்துவமனை வரை 300மி.மீ விட்டமுள்ள நீர்த்த இரும்பு குழாய் (Ductile Iron Pipe) பதித்தல் | 30.00 |
| 2 | வார்டு எண்:14 என்.ஜி.ஆர் சாலை அண்ணா சிலை முதல் மங்கலம் சாலை தண்டபாணி கோவில் வரை 300மி.மீ விட்டமுள்ள நீர்த்த இரும்பு குழாய் (Ductile Iron Pipe) பதித்தல் | 20.00 |
| 3 | வார்டு எண் :01 கல்லம்பாளையம் குறிஞ்சி நகர், வார்டு எண் :02 சேடபாளையம் மேல்நிலைத் தொட்டி முதல் குமரன் நகர் வரை, வார்டு எண் :03 தெற்குபாளையம் பேருந்து நிறுத்தம் முதல் பாம்பே கார்டன் வரை மற்றும்வார்டு எண் :08 பனப்பாளையம் பெத்தாம்பாளையம் சாலை வரை பிவிசி பகிர்மான குழாய் பதித்தல் | 8.50 |
| 4 | வார்டு எண் :16 மாணிக்காபுரம் சாலையில் (திருச்சி சாலை சந்திப்பு முதல் இராணி மருத்துவமனை வரை) 160 மி.மீ. விட்டமுள்ள பிவிசி பகிர்மான குழாய் பதித்தல் | 1.50 |

மேலும் மேற்கண்ட பணிக்கு 31.12.2020 ம் நாளன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஏறக்குறைய 9 மாதங்கள் நிறைவு பெற்றுவிட்டது. இந்நிலையில் தற்போது குடிநீர் குழாய்களின் விலையேற்றம் மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தாலும், எந்தவொரு ஒப்பந்ததாரரும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்வதற்கு தயார் நிலையில் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, மேற்கண்ட நான்கு பணிகளை ரத்து செய்வதற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1445/2020/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 21

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 01 கல்லம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு மேற்புறம் உள்ள வீடுகளுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்க்கு தண்ணீர் விநியோகம் செய்ய, ஏற்கனவே உள்ள சின்டெக்ஸ் டேங்கிற்கு குட்டையில் உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து சின்டெக்ஸ் டேங்க் வரை புதிதாக பகிர்மான குழாய் அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.30,000 ஆகும். மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.V.சுப்பரமணியம் அவர்களுக்கு ஒப்படைப்பு பணியாக மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 22

பல்லடம் நகராட்சி சொந்தமான வார்டு எண்: 01 கல்லம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் 230 மாணவ,மாணவியர் உள்ளனர். மாணவர்கள் கைகளுவுவதற்கும், கழிப்பிடத்திற்கும் தண்ணீர் வசதி ஏற்படுத்தி தர தலைமையாசிரியர் தெரிவித்துள்ளார் பள்ளியை ஆய்வு செய்யப்பட்டதில் மாணவர்கள் கைகளுவுவதற்கும், கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி இல்லாத நிலையில் உள்ளது. எனவே கல்லம்பாளையம் நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றின் பிரதான குழாயில் இருந்து நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு புதிதாக குழாய் அமைக்கவும், கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10,000 (பத்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்கானும் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.V.சுப்பரமனியம் அவர்களுக்கு ஒப்படைப்பு பணியாக மேற்கொள்வதற்கு பணியை செய்ய மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 23

மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் அவர்களின் நேரடி ஆய்வு குறிப்பில் பல்லடம் நகராட்சி வார்டு எண்: 15 அண்ணாநகர் நகராட்சி தொடக்கப்பள்ளியை ஆய்வு செய்யப்பட்டதில் தெற்கு பார்த்த கட்டிடம் மேற்கூரை பழுதடைந்து உள்ளதாகவும் இதனால் மாணவர்கள் சிரமப்படுவதால் உடனடியாக மேற்கண்ட கட்டிடத்தில் மராமரத்துப் பணிகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் நகராட்சி தொடக்கப்பள்ளியில் பழுதடைந்த மேற்கூரையை அகற்றிவிட்டு புதியதாக GI Sheet அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணியை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 24</u>

பல்லடம் நகராட்சி அலுவலகத்திற்கு, இணை இயக்குநர் (நிர்வாகம்), நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்கள் 01.10.2021 அன்று நகராட்சி அலுவலகத்தில் பதிவேடுகள்,கோப்புகள் மற்றும் அலுவலக பதிவு அறையை நேரில் ஆய்வு செய்ததில் நகராட்சி பதிவு அறையில் ரேக்குகள் வைத்து அலுவலக பதிவேடுகள் வருடம் வாரியாக பராமரித்திட வேண்டும் என்று தெரிவித்தார்.

எனவே நகராட்சி அலுவலகம் பின்புறம் உள்ள பதிவு அறையில் புதியதாக Steel Rack விநியோகம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கானும் பணிக்கு உரிய நிர்வாக அனுமதியும், பணியை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 25</u>

பல்லடம் நகராட்சிக்குச் சொந்தமான அண்ணா பேருந்துநிலையப் பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டதில் பேருந்துநிலையத்தில் 20 எண்ணிக்கையிலான LED விளக்குகள் எரியாத நிலையில் இருந்தது மேலும் ஆண்கள் இலவச சிறுநீர் கழிப்பிடத்தில் உள்ள பேசன் பழுதடைந்த நிலையில் உள்ளது.

எனவே மேற்கண்ட பேருந்துநிலையத்தில் பொதுமக்கள் அதிகமாக வருவதால் பழுதடைந்த விளக்குகள் மற்றும் சிறுநீர் கழிப்பிட பேசன்கள் புதியதாக அமைக்கவேண்டியுள்ளது. மேற்கானும் பணிகளை மேற்கொள்ள செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.50 இலட்சம் (ஐம்பதாயிரம் மட்டும்) இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 26</u>

பல்லடம் நகராட்சியில் அண்ணா பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கான குத்தகை காலம் 30.09.2021 ல் முடிவடைவதாலும், மேற்காணும் இனத்திற்கு ஏலம் ஏதும் போகாத காரணத்தினாலும், ஏற்கனவே நடத்தி வரும் குத்தகைதாரரின் இசைவின் அடிப்படையில் பழைய மதிப்பிற்கே குத்தகை எடுக்கும் வரையிலோ அல்லது மார்ச் 2022 வரையிலோ இதில் எது முன்னதோ அதுவரை அவரே தொடர்ந்து நடத்திவர ஆணையாளர்/ தனிஅலுவலரின் முன் அனுமதி பெறப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

## பொருள் : 27

பல்லடம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள Genarator தற்சமயம் திறந்தவெளியில் உள்ளது. இதனால் மழை காலங்களில் தண்ணீர் விழுவதால் Genarator பழுதடையும் நிலை ஏற்படும் என்பதாலும் மற்றும் நகராட்சி அலுவலர்கள், பொதுமக்களின் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு நகராட்சி முன்பு இடம் இல்லாத நிலையில் உள்ளது. எனவே நகராட்சி அலுவலர்கள் மற்றும் பொது மக்களின் நலன் கருதி அலுவலகம் பின்புறம் உள்ள காலியிடத்தில் இரண்டு சக்கர வாகனம் நிறுத்த புதியதாக செட் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.90 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 28

பல்லடம் நகராட்சியின் பரப்பளவு 19.42 சதுர கி.மீ 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி நகராட்சியின் மக்கள் தொகை 42225 ஆகும். தற்பொது பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தின் மூலம் தினசரி 38.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்கு சொந்தமான 12 நீர் தேக்க தொட்டி (கொள்ளளவு 19.70 இலட்சம் லிட்டர்) மூலம் 4.00 எம்.எல்.டி குடிநீர், 103 ஆழ்துளைகிணறுகள் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 LPCD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பல்லடம் நகராட்சியில் வளர்ந்துவரும் மக்கள் பெருக்கத்திற்கேற்ப தற்போது உள்ள குடிநீர் திட்டத்தை ஜல் ஜீவன் மிஷன் அம்ருத் 2.0 திட்டத்தின் மூலம் 100% மானியத்துடன் ஏற்கனவே உள்ள கட்டுமானத்துடன் கூடுதலாக கட்டுமானங்கள் உத்தேசித்து குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய Tamilnadu Water Investment Company சென்னை அவர்கள் மூலம் தனியார் ஆலோசகர் (Consultant) நியமிக்கவும் அதற்குண்டான செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மோற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 29

மாவட்ட ஆட்சித்தலைவர் திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்:1450/2021/எச்1 நாள்:17.09.2021 தேதியிட்ட கடிதத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலங்களில் வெள்ள பாதிப்புகளை எதிர்கொள்ள பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க தெரிவித்துள்ளார்.

எனவே பல்லடம் நகராட்சி துப்புரவு ஆய்வாளர்அவர்கள் அளித்துள்ள குறிப்பின்படி வடிகால் மற்றும் பாலங்கள் தூர்வாரி சுத்தம் செய்யவும், சுத்தம் செய்வதற்கான உபகரனங்கள் வாங்கி தருமாறு கூறியுள்ளார்.

**தேவையான உபகரணங்கள் :**

1. White Phenyl – 100 litter
2. Black Phenyl – 100 litter
3. Broom Stick with Bamboo Handle – 150nos
4. Hand broom Stick – 100nos
5. Rake with Bamboo Handle (Drain Cleaning) – 80nos
6. Bill Hook – 10nos
7. Crow Bar – 10nos
8. Shovel – 20nos
9. Plastic tub – 50nos
10. Bamboo Basket – 20nos
11. Garden Spado with wooden Handle – 50nos
12. Garbage collecting plate – 50nos
13. Bamboo rake for garbage collection – 20nos
14. Chain saw machine – 2nos
15. Garden Craft Machine – 1no

எனவே மேற்கண்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 30

2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பல்லடம் நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 42225 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 55175 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 19.42 சதுர கி.மீ கொண்டு 18 வார்டுகள் உள்ளடக்கியதாகும். இந்நகரில் 15804 குடியிருப்புகளும், 2933 வர்த்தக நிறுவனங்களும் உள்ளன. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தற்சமயம் நகரின் அனைத்து வார்டுகளுக்கும் 3.90 MLD அளவுடைய குடிநீர் மற்றும் நகராட்சியின் நீராதாரம் மூலம் 0.80 MLD அளவுடைய குடிநீரும் 12 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்தேக்கத்தொட்டிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நாள்: 02.10.2021ன் படி வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை அமர்த்தி குடிநீர் விநியோகம் பணிகளை மேற்கொள்ள வேண்டி வெளியிட்டுள்ள அளவுகோல்படி இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தேவைப்படும் பணியாளர்களின் விபரம் கீழ்கண்டவாறு :-

| வ. எண் | பணியின் விபரம் | அளவுகோல்கள்படி தேவைப்படும் பணியாளர்கள் | தற்போதுள்ள நிரந்தர பணியாளர்கள் | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | மேல்நிலைத் தொட்டிகள், தரைமட்டத் தொட்டிகள் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்கள் தொடர்புடைய பணியாளர்கள் | 16 | 0 | 16 |
| 2 | ஓட்டுநர் | 1 | 0 | 1 |
| 3 | துலக்குநர் | 1 | 0 | 1 |

மேற்கண்ட அளவுகோலின்படி குடிநீர் விநியோகப் பணிகளுக்கு தேவையான 16 பராமரிப்பு உதவியாளர்கள், 1 ஓட்டுநர் மற்றும் 1 துலக்குநர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி குடிநீர் விநியோக பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.47.04 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1517/2021/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## <u>பொருள் : 31</u>

பல்லடம் நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதாரப்பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் தினசரி நடைபெறும் பணிகளை கணினியில் பதிவேற்றம் செய்து அதன் நகலை நகல் எடுக்கவும், பொறியியல் பிரிவில் பல்வேறு திட்டப்பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருவதால் நகல் எடுக்கவும் வேண்டியுள்ளது. மேலும், தற்சமயம் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் வருவதால் வாக்காளர் பதிவு நகல் எடுக்க வேண்டியுள்ளது. எனவே, ஏற்கனவே உள்ள Xerox machine பழுது அடைந்து தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இந்த Xerox Machine சுமார் 10 வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்ட இயந்திரம் என்பதாலும், தற்போது அதனுடைய செயல்திறன் இழந்துவிட்டதால், மீண்டும் சரிசெய்ய முடியாத நிலையில் உள்ளது.

மேலும், இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினி இயந்திரங்கள் பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, சுகாதாரப்பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் உள்ள கணினியில் பதிவேற்றம் செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஆய்வுக் கூட்டம் (Video Conference) நடைபெறுவதால் நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக All in one Pc 4 எண்ணிக்கைகள் கணினி இயந்திரம் வாங்கவும், 3 எண்ணிக்கைகள் HP Laser Printer with Scanner வாங்கவும் வேண்டியுள்ளது.

எனவே, அலுவலக பணிகளுக்கு புதியதாக Xerox Machine, All in one Pc மற்றும் HP Laser Printer with Scanner வாங்க தயாரிக்கப்பட்ட உத்தேச செலவு ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்காணும் பணிக்கு உரிய நிர்வாக அனுமதியும், பணியை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :32

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 15 அண்ணா நகர் பகுதியிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி செயல்பட்டுவருகிறது. மேற்கண்ட கட்டிடத்தினை ஆணையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டதில் அண்ணா நகர் பள்ளி கட்டிடத்தின் மேற்கூரையில் மழைநீர் தேங்கியிருந்த நிலையில் இருந்தது. இதனால் கட்டிடம் பாதிப்பு ஏற்படும் என்பதால் கட்டிடத்தின் மேற்பகுதியில் Weathering Course மற்றும் pressed Tiles அமைக்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட பணிகளை செய்தால் மட்டுமே பள்ளி கட்டிடத்திற்குள் மழைநீர் கசிந்து உள்ளேவராது. எனவே பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் நலன் கருதி மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் மராமத்து பணிகளை மேற்கொள்ள ரூ.2.90 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :33

பல்லடம் நகராட்சி வார்டு எண்: 15 அண்ணா நகர் பகுதியிலுள்ள நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் அரசு உயர்நிலைப்பள்ளி செயல்பட்டுவருகிறது. மேற்கண்ட கட்டிடத்தினை ஆணையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோரால் ஆய்வு செய்யப்பட்டதில் அண்ணா நகர் பள்ளியில் 300 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். பள்ளியில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு போதுமான கழிப்பிட வசதி இல்லாத நிலையில் உள்ளது. இதனால் மாணவ மாணவிகள் சிரமப்பட்டு வருகிறார்கள்.

எனவே பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் சுகாதார நலன் கருதி மேற்கண்ட பள்ளியில் புதிதாக கழிப்பிட வசதி மற்றும் காலியிடத்தில் விளையாட்டுப் பொருட்கள் வைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :34

பல்லடம் நகராட்சியில் பொறியியல் பிரிவின் மூலம் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம், 15வது நிதிக் குழு திட்டம், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்(NULM), சிறப்பு சாலைகள் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், ஜல் ஜீவன் மிஷன் (Urban) மற்றும் நகராட்சிப் பொது நிதி போன்ற பல்வேறு விதமான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகராட்சியில் பட

வரைவாளர் பணியிடமும் இல்லாததால், மேற்கண்ட பணிப் பொறுப்புகளையும், பணி மேற்பார்வையாளரால் மட்டுமே மேற்கொள்ள நேரிடுகிறது.

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் போன்ற அலுவலகங்களுக்கு அடிக்கடி திட்டப் பிரேரணைகள், மதிப்பீடுகள், பணி முடிவு அறிக்கை மற்றும் பணிகள் தொடர்பான விபரங்களை நேரடியாக சென்று சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் அனைத்தையும் மேற்கொள்ளும் போது பணி மேற்பார்வையாளரால் பணிகள் மேற்கொள்வதில் கால தாமதம் ஏற்படுவதுடன் பணிகளும் சுணக்கம் ஏற்படுகிறது. எனவே, பல்லடம் நகராட்சியில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் உடனடியாக கால தாமதமின்றி நிறைவேற்றுவதற்கு ஏதுவாக ஒரு தொழில் நுட்ப பணியாளரை 11 மாதத்திற்கு, 330 நாட்களுக்கு (தமிழ்நாடு அரசு பொதுபணித்துறை தரப்படுத்தப்பட்ட விலை விகிதப் பட்டியல் படி) தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.55 இலட்சம் ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும். மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் :35

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்–2021 க்கு கீழ்காணும் வரைபடங்கள் தயார் செய்ய வேண்டியுள்ளது:-

| | | |
|---|---|---|
| 1 | Polling Station Map | A4 Size |
| 2 | Town map with Zonal map | A2 Size (Color) |
| 3 | Town map with Route map | A2 Size (Color) |
| 4 | Town map with Polling Station | A2 Size (Color) |
| 5 | Counting Station map | A2 Size (Color) |
| 6 | Strong room map | A2 Size (Color) |
| 7 | Polling Station Route map | A4 Size |

மேற்காணும் வரைபடங்களை தயார் செய்யும் பணிக்கு பல்லடம் நகராட்சியில் பதிவு பெற்ற பொறியாளர்களிடம் விலைப்புள்ளி பெற்று பணியினை மேற்கொள்ளவும், மேற்காணும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.50,000/- க்கு மற்றும் தேர்தல் பணி என்பதால் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தேர்தல் பணி என்பதால் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தனி அலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**